**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.796 /2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : PW- 3 | Village: |
| Name : சாந்தி | Age :43 |
| Father's/Husband's Name : ரவிச்சந்திரன் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 03.06.2024**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. ரமா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

3, 4 **எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 2 வது எதிரி ஆஜரில்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1 வது எதிரி இறந்துவிட்டார்.**

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் எங்கு வைத்து எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்றே போலிசார் வந்துவிட்டார்கள். மறுநாள் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை

செய்தார்கள். எனக்கு கணவர் சொல்லிதான் எனக்கு சம்பவம் பற்றி தெரியும் என்றால் சரியல்ல. நானே நெரடியாக பார்த்தேன். எனது கணவரை எத்தனை பேர் அடித்துக்கொண்டிருந்தார்கள் என்றால் ஆஜர் எதிரிகள், அவர்களது அப்பா மாரிமுத்து மற்றும் மாரிமுத்துவின் மற்றொரு மகன் ஆகியோர் அடித்துக் கொண்டிருந்தார்கள். மேற்படி விவரத்தை நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சம்பவத்தின்போது கூட்டமாக இருந்தது என்றால் போலிசார் வந்த பிறகுதான் எங்களால் வீட்டை விட்டு வெளியே வர முடிந்தது. நான் சொன்னவாறு எதிரிகள்அசா1 மற்றும் அசா2 ஐ தாக்கவில்லை என்றாலும் வேலி பிரச்சனை காரணமாக எதிரிகள் மீது அசா2 கொடுத்த பொய்யான புகாருக்கு அனுசரணையாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.796 /2019 <br> Sessions : <br> Deposition of Witness for : PW- 2 <br> Name : ரவிச்சந்திரன் <br> Father's/Husband's Name : பக்தவத்சலம் <br> Nationality : Indian | Village: <br> Age :60 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 03.06.2024**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. ரமா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

3, 4 **எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 2 வது எதிரி ஆஜரில்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1 வது எதிரி இறந்துவிட்டார்.**

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். தேதி ஞாபகமில்லை.

போலிசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் வைத்து ஒரு முறையும், காவல் நிலையத் வரவழைத்து ஒரு முறையும் விசாரித்தார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். போலிசார் மருத்துவமனையில் வந்து எழுதிக் கொண்டு என்னிடம் கையொப்பம் மட்டும் பெற்றார்கள் என்றால் என்னிடம் விசாரித்து நான் சொல்ல சொல்ல அதனை எழுதிக் கொண்டு என்னிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டார்கள். எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடையே பொழி பிரச்சனை இருந்து வந்ததா என்றால் இல்லை. எதிரிகள் இல்லாத போது அவர்களின் பூவரசு மரத்தை நான் வெட்டி போட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. அது எங்களுடைய மரமாகும். மேற்படி பூவரசு மரம் எங்களிடத்தில் இருந்தது என்பதை காட்டுவதற்கு போலிசாரிடம் ஆவணம் எதுவும் காட்டினேனா என்றால் போலிசார் கேட்காததால் காட்டவில்லை. நான் எதிரிகளின் மரத்தைதான் வெட்டினேன் என்றாலும் எங்கள் மரம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னவாறு எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றாலும் வேலி பிரச்சனை காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றாலும் சரியல்ல. நான் சம்பவத்தின்போது எத்தனை மணிக்கு வேலை முடித்துவிட்டு வீட்டிற்கு வந்தேன் என்றால் நேரம் எனக்கு ஞாபகமில்லை. என்னை எந்த போலிசார் விசாரித்தார் என்றால் உதவி ஆய்வாளர் விசாரித்தார். எங்கள் வீட்டில் பிரச்சனை நடந்தபோது ஊர்க்காரர்கள் கூடி விட்டார்கள் என்றால் நான் சம்பவத்தின்போது வீட்டிற்குள் மாட்டிக்கொண்டேன். ஊர்க்காரர்கள் வேடிக்கை பார்த்திருப்பார்கள். நான் சம்பவத்தின்போது வீட்டிற்குள் மாட்டிக்கொண்டதாக நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன்.. போலிசார் வந்துதான் எங்களை மருத்துமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான்.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.796 /2019 <br> Sessions : <br> Deposition of Witness for : PW-1 <br> Name : சீதாலெட்சுமி <br> Father's/Husband's Name : பக்தவத்சலம் <br> Nationality : Indian | Village: <br> Age :50 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 03.06.2024**

சாட்சியை திருவிடைமருதூர் தலைமைக் காவலர் திருமதி. ரமா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

3, 4 **எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 2 வது எதிரி ஆஜரில்லை. அவரது தரப்பில் 317 குவிமுச பிரிவின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1 வது எதிரி இறந்துவிட்டார்.**

**<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். என்னை போலிசார் எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அதன்

பிறகு போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 1 வாரம் கழித்து வீட்டில் வந்து விசாரித்தார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. எனக்கு தேதி நாள் எல்லாம் தெரியுமா என்றால் நான் அடிப்பட்ட தேதி என்பதால் ஞாபகம் உள்ளது. எதிரிகள் வீடும் எனது வீடும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். எங்களுக்கும் அவர்களுக்கும் இடையே வேலி பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. பாதையில் விழுந்து கடந்த எங்கள் மரத்தை நாங்கள் எடுத்தோம். மேற்படி மரம் எங்களுடையது என்பதற்கான ஆவணம் எதுவும் போலிசாரிடம் கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். எங்கள் மரத்தை வெட்டியதற்கு ஏன் எதிரிகள் பிரச்சனை செய்தார்கள் என்றால் அவர்கள் வேண்டும் என்றே பிரச்சனை செய்தார்கள். எதிரிகளுக்கம் எங்களுக்கும் முன்விரோம் எதுவும் இல்லை என்றால் சரிதான். அசா2 ரவிச்சந்திரன் எனது அண்ணன் ஆவார். எதிரிகளுக்கும் எங்களுக்கும் சண்டை நடந்ததாக சொல்லும் நேரத்தில் ஊர்க்காரர்கள் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். யார் யார் என்னை அடித்தார்கள் என்று ஊர்க்காரர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. யார் யார் அடித்தார்கள் என்று எனக்கே தெரியும். அதில் யார் யாருக்கு அடிப்பட்டது என்றால் எனக்கும் என் அண்ணனுக்கும் அடிப்பட்டது. சுந்தரமூர்த்தி, கண்ணன், மாரியப்பன், பிச்சை மற்றும் ராஜேந்திரன் ஆகியோர்களுக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியுமா என்றால் ஊர்க்காரர்கள் முழுவதும் கூடி நின்று பார்த்தார்கள். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் நாங்கள் போன் செய்த உடனே சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். போலிசார் வந்த பிறகுதான் நாங்கள் மருத்துவமனை சென்றோம் என்றால் சரிதான். அதன் பிறகு போலிசார் எங்களை மருத்துவமனையில் வந்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்னவாறு எதிரிகள் என்னை தாக்கவில்லை என்றாலும் வேலி பிரச்சனை காரணமாக எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளோம் என்றாலும் சரியல்ல. நானும் என் அண்ணனும் சேர்ந்து

எதிரிகளுக்கு எதிராக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயம் எனது அண்ணன் கிளை வெட்டியபோது ஏற்பட்ட காயம் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**